# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

**<u>பெருந்தோட்டப் பகுதிகளில் உள்ள பாடசாலைகளுக்கான STEM ஆசிரியர் பயிற்சித் திட்டம் வெற்றிகரமாக நிறைவு</u>**

இலங்கையின் பெருந்தோட்ட பகுதிகளில் உள்ள பாடசாலைகளுக்காக இந்திய நன்கொடை உதவி திட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட STEM பாடநெறி ஆசிரியர்களுக்கான 3 மாத பயிற்சி நிறைவடைந்ததைக் குறிக்கும் முகமாக சுற்றுச் சூழல், வன ஜீவராசிகள், வன வளங்கள், நீர் வழங்கல், பெருந்தோட்ட மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சில் 2024 ஒக்டோபர் 18 ஆம் திகதி விசேட நிகழ்வொன்று நடைபெற்றது.

2. இந்த நிகழ்வில் இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா, கல்வி விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்ப அமைச்சின் செயலாளர் திருமதி ஜே எம் திலகா ஜயசுந்தர, சுற்றுச் சூழல், வன ஜீவராசிகள், வன வளங்கள், நீர் வழங்கல், பெருந்தோட்ட மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு, கல்வி விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்ப அமைச்சு மற்றும் இலங்கை தேசிய கல்வி நிறுவகம் ஆகியவற்றின் சிரேஸ்ட அதிகாரிகள் கலந்துகொண்டிருந்தனர்.

3. நாட்டின் பெருந்தோட்ட பகுதிகளில் உள்ள பாடசாலைகளின் STEM (பௌதீகவியல், கணிதம், இரசாயனவியல் ஆங்கிலம் மற்றும் உயிரியல்) பாடநெறி ஆசிரியர்களுக்கான பயிற்சிகளை வழங்கும் நோக்குடன் இலங்கை அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக இந்த நிகழ்ச்சித்திட்டம் வடிவமைக்கப்பட்டிருந்தது. இந்தியாவை பூர்வீகமாகக் கொண்ட தமிழ் மக்கள் இலங்கைக்கு வருகைதந்து 200 ஆண்டுகள் நிறைவடைந்ததைக் குறிக்கும் முகமாக கடந்த வருடம் அறிவிக்கப்பட்டிருந்த 750 மில்லியன் இந்திய ரூபா பல்நோக்கு நன்கொடையின் கீழ் இத்திட்டம் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.

4. இந்த திட்டத்தின் அடிப்படைகளின் கீழ் 19 இந்திய ஆசிரியர்கள் STEM பாடநெறிகளில் பயிற்சிகளை வழங்குவதற்காக 2024 ஜூலை மாதம் இலங்கைக்கு வருகைதந்திருந்தனர். அதனை அடுத்து தேசிய கல்வி நிறுவகத்தால் நடத்தப்பட்ட நெறிப்படுத்தல் அமர்வின்பின் பெருந்தோட்ட பாடசாலைகளில் இப்பயிற்சி நெறிகளை முன்னெடுப்பதற்காக அவர்கள் சேவைகளில் ஈடுபடுத்தப்பட்டனர்.

5. மத்திய, ஊவா, சப்ரகமுவ, மற்றும் மேல் மாகாணங்களில் அமைக்கப்பட்ட 40 நிலையங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த 10 வார நிகழ்ச்சித் திட்டம் நடத்தப்பட்டதுடன் இந்திய வளவாளர்களால் முன்னெடுக்கப்பட்ட இப்பயிற்சி மூலமாக சுமார் 2000க்கும் அதிகமான ஆசிரியர்கள் பயனடைந்துள்ளனர்.

6. இந்நிலையில் 2024 ஒக்டோபர் 18 ஆம் திகதி நடைபெற்ற நிறைவு நாள் நிகழ்வின்போது உரை நிகழ்த்திய கல்வி விஞ்ஞான மற்றும் தொழில் நுட்ப அமைச்சின் செயலாளர் அவர்கள், இப்பயிற்சி நெறியானது பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கும் பாடசாலைகளுக்கும் மிகவும் வினைத்திறன் மிக்கதாகவும்

உயர்ந்த பெறுபேற்றைக் கொண்டிருப்பதாகவும் குறிப்பிட்டதுடன் இவ்வாறான பயிற்சிகளை எதிர்வரும் காலங்களிலும் நடத்தவேண்டுமென பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் கோரியதாகவும் தெரிவித்திருந்தார். இச்சந்தர்ப்பத்தில் குறித்த 19 இந்திய ஆசிரிய வளவாளர்களும் இலங்கை அரசாங்கத்தால் விசேடமாக கௌரவிக்கப்பட்டனர்.

7. இதேவேளை இந்த ஆசிரியர் பயிற்சி திட்டமானது வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளமையானது, இந்தியா மற்றும் இலங்கையால் பகிரப்படும் தனித்துவமிக்க மக்களிடையிலான பிணைப்பினை மேலும் வலுவாக்கும் செயற்பாடுகளுக்கு பங்களிப்பினை வழங்குமென இங்கு உரை நிகழ்த்தியிருந்த இந்திய உயர் ஸ்தானிகர் தெரிவித்திருந்தார். நாடளாவிய ரீதியில் காணப்படும் கல்வி, வீடமைப்பு, சுகாதாரம், விவசாயம், வாழ்வாதாரம், கலப்பு புதுப்பிக்கத்தக்க சக்தி திட்டங்கள், துறைமுகங்கள் , ரயில்வே, மதத்தலங்களுக்கான சூரியக்கல மின்சக்தி போன்ற பல்வேறு துறைகளிலும் மக்களின் தினசரி வாழ்வில் நேர்மறையான பிரதிபலிப்புகளை ஏற்படுத்தும் வகையிலும் இலங்கை அரசாங்கத்தினதும் இலங்கை மக்களினதும் தேவைகளை அடிப்படையாகக் கொண்ட முன்னுரிமைக்கு முக்கியத்துவமளித்து இலங்கையில் இந்தியாவால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி பங்குடைமை திட்டங்களின் நீண்ட பட்டியலில் இந்நிகழ்ச்சித் திட்டமும் இணைந்துகொள்கின்றது என உயர் ஸ்தானிகர் இங்கு சுட்டிக்காட்டியிருந்தார்.

********

**கொழும்பு**
**20 ஒக்டோபர் 2024**